033

# இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## கல்விப் பீடம்

முன்பிள்ளைப் பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை

கல்விமாணி (சிறப்பு) ஆரம்பக் கல்வி

இறுதிப் பரீட்சை

**EPU 3530 – பிள்ளை விருத்தி**

பகுதி I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி II இல் மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

திகதி : 07/01/2023 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12.30

## பகுதி I

1. விருத்தி மைல்கற்களை உதாரணங்களுடன் விளக்குக.
2. பிள்ளை விருத்தியில் தாக்கம் செலுத்தும் சுற்றாடல் சார்ந்த காரணிகள் மூன்றினை (03) சுருக்கமாக விளக்குக.
3. "சூழல் எதிர் பரம்பரை" என்பதை விளக்குக.
4. பெற்றோரியல் விருத்தியில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் ஐந்தினை (05) எழுதுக.
5. பியாஜேயினால் அறிமுகம் செய்யப்பட்ட அறிகைப்புல விருத்தியின் முன்தூல சிந்தனை பருவத்துக்குரிய இயல்புகளை சுருக்கமாக விளக்குக.
6. "முன்பள்ளிப் பருவத்திலும் முன் ஆரம்பப்பருவத்திலும் பிள்ளைகளிடையே சமூக விருத்தி, உணர்வு விருத்தி என்பவற்றில் பாரிய முன்னேற்றம் ஏற்படுகின்றது." இப்பிள்ளைகளின் சமூக விருத்தி, உணர்வு விருத்தி என்பவற்றிற்கு உதவக்கூடியதாக வகுப்பறையில் ஆசிரியர் அமுல்படுத்தக்கூடிய மூன்று (03) செயற்பாடுகளை கலந்துரையாடுக.
7. ஆளுமை என்றால் என்னவென வரைவிலக்கணத்துடன் விளக்குக.
8. உளவியலாளர்கள் பிள்ளைகளின் ஒழுக்க விருத்தியில் நான்கு (04) கட்டங்களை இனங்கண்டுள்ளனர். அவற்றினைப் பெயரிடுக.

(8x5 = 40 புள்ளிகள்)

# பகுதி II

9.

i. பிள்ளை விருத்தியின் ஆட்சிகளைப் பெயரிடுக. (10 புள்ளிகள்)

ii. இந்த ஆட்சிகளுள் ஏதாவது இரண்டினை விருத்தி செய்வதற்கு ஆசிரியரால் முன்னெடுக்கக்கூடிய சாத்தியமான பணிகள் மூன்றினை (03) சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

10.

i. மூளை விருத்தி தொடர்பான தற்கால நரம்பியல் விஞ்ஞான ஆய்வுகள் பற்றிய உமது விளக்கத்தை தருக. (10 புள்ளிகள்)

ii. மூளைவிருத்தியில் தாக்கம் செலுத்தும் பிரசவத்திற்கு முந்திய காரணிகளை குறிப்பிட்டு, இக்காரணிகளை எவ்வாறு உமது விளக்கத்திற்கு ஏற்ப தற்கால நரம்பியல் ஆய்வுகளுக்கேற்ப பயன்படுத்துவீர்கள் என சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

11.

i. விகொட்ஸ்கியினதும் பியாஜேயினதும் அறிகைப் புலக் கொள்கைகளின் சாரம்சத்தினை தருக. (10 புள்ளிகள்)

ii. ஆசிரியர் என்ற வகையில் பியாஜேயினதும் விகொட்ஸ்கியினதும் கொள்ளைகளை பிள்ளைகளின் அறிகைப்புல விருத்தி தொடர்பாக உதவுவதற்கு எவ்வாறு பயன்படுத்துவீரென விளக்குக. (10 புள்ளிகள்)

12.

i. மொழி விருத்தியில் நடத்தையியலாளர்களின் கருத்துக்களுக்கும் இயற்கையியலாளர்களின் கருத்துக்களுக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக. (10 புள்ளிகள்)

ii. பிள்ளைகளின் மொழித்திறன்களின் விருத்திக்கு ஆரம்ப வகுப்பு ஆசிரியர் எவ்வாறு துணைபுரிய முடியுமெனை விளக்குக. (10 புள்ளிகள்)

13.

i. ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் எவ்வாறு பிள்ளைகளின் பரவலான வளர்ச்சிக் கோளாறுகளை இனங்காண்பீர்கள் என விளக்குக. (10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி/ ஆரம்ப பாடசாலை ஆசிரிரென்ற வகையில் இந்த பிரச்சினையான நடத்தையை கட்டுப்படுத்த எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை விளக்குக. (10 புள்ளிகள்)

பதிப்புரிமை பெற்றது